# Official Spokesperson's response to media queries on the announcement by the US of withdrawal of its troops from Afghanistan before September 11, 2021

April 16, 2021

---

# செப்டம்பர் 11, 2021 க்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் இருந்து தனது துருப்புக்களை திரும்பப்பெறுவதாக அமெரிக்கா அறிவித்த செய்தி தொடர்பான ஊடகக் கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அளித்த பதில்

ஏப்ரல் 16, 2021

செப்டம்பர் 11, 2021 க்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் இருந்து தனது துருப்புக்களை திரும்பப்பெறுவதாக அமெரிக்கா அறிவித்த செய்திதொடர்பான ஊடகக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:

"ஆப்கானிஸ்தானில் இருந்த தனது துருப்புக்களை திரும்பப் பெறுவதற்கும் அதன் இராணுவ நடவடிக்கைகளை அங்கேயே முடிப்பதற்கும் அமெரிக்கா எடுத்த முடிவை நாங்கள் கவனித்திருக்கிறோம். நடந்து கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தான் சமாதன முன்னெடுப்புகளை நாங்கள் நெருக்கமாக பின்பற்றுகிறோம். ஆப்கானிய மக்கள் நான்கு தசாப்தங்களுக்கும் மேலான யுத்தத்தையும் அமைதியின்மையையும் கண்டிருக்கிறார்கள் மற்றும் நீண்ட கால அமைதி மற்றும் வளர்ச்சிக்கு தகுதியானவர்கள்.

ஆப்கானிஸ்தான் சமாதான முன்னெடுப்புகள் ஆப்கான் தலைமயிலான, ஆப்கானிஸ்தானுக்கு சொந்தமான மற்றும் ஆப்கானிய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பது இந்தியா கருத்து. எந்தவொரு அரசியல் தீர்வும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் மற்றும் கடந்த 19 ஆண்டுகளின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் ஆதாயங்களை பாதுகாக்க வேண்டும். ஐக்கிய, ஜனநாயக மற்றும் இறையாண்மை கொண்ட ஆப்கானிஸ்தானை இந்தியா ஆதரிக்கிறது. ஆப்கானிஸ்தானில் வன்முறை அதிகரிப்பு மற்றும் இலக்கு வைக்கப்பட்ட கொலைகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். உடனடி மற்றும் விரிவான போர்நிறுத்தத்திற்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது

தோஹா மாநாடு, ஜெனீவா மாநாடு மற்றும் சமீபத்தில் துஷன்பேவில் நடந்த ஹார்ட் ஆப் ஆசியா மாநாட்டில் இந்தியா பங்கேற்றுள்ளது. ஆப்கானிஸ்தான் பங்குதாரர்களுடனும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து நமது பிராந்திய மற்றும் சர்வதேச பங்காளிகளுடனும் இந்தியா தொடர்ந்து ஈடுபட்டுள்ளது”

நியூ டெல்லி
**ஏப்ரல் 16, 2021**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.